# கண் இமையின் அதிபதி யார் ?

## சாந்திப்பிரியா



நிமி மன்னன் கண் இமையாக மாறினார்

பண்டைய பாரத நாட்டில் இருந்த நகரம் மிதிலை. இராமாயணத்தைப் படித்த அனைவருக்கும் அது தெரியும். மிதிலையின் பண்டை காலத்திய பெயர் விதிஹா. ஒரு காலத்தில் அந்தப் பகுதியை ஆண்டு வந்த மன்னன் மக்களை அடிக்கடி யாகங்களும், ஹோமங்களும் செய்து வருமாறுக் கட்டாயப் படுத்தியது மட்டும் அல்லாமல் தானும் அவற்றை செய்து வந்தானாம். எவரும் தம்முடைய நாட்டை புனிதமானது அல்ல எனக் கருத மாட்டார்கள் என்ற எண்ணம்தான் அதற்குக் காரணம். அந்த யாகத்தை செய்த மன்னன் பெயர் மிதி . லா என்றால் வைத்திருப்பது என்ற பொருள். அந்த பூமியை தன்னிடம் கொண்டவன் என்ற பொருளில் மிதி + லா = மிதிலா என அந்த நாட்டின் பெயர் மாறியது. அதை ஜனக மன்னர்களின் பரம்பரையினர் ஆண்டு வந்தனர்.

அப்படிப்பட்ட பரம்பரையில் வந்த இஷ்வாக்கு என்ற மன்னனின் புதல்வர் நிமி என்பவர். அவர் ஒரு முறை மிகப் பெரிய யாகம் ஒன்றை செய்ய எண்ணினார். அந்த யாகம் சுமார் ஆயிரம் ஆண்டுகள் நடைபெறும் எனவும் அதை மேற்பார்வையிட்டு சிறந்த முறையில் நடத்தித் தர வேண்டும் எனவும் தம்முடைய இராஜ்ய குருவான வசிஷ்ட முனிவரிடம் வேண்டிக் கொண்டார். ஆனால் வசிஷ்ட முனிவரோ தான் ஏற்கனவே இந்திரனுக்கு ஒரு யாகத்தை ஐந்நூறு வருடங்கள் நடத்திக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு விட்டதாகவும், ஆகவே அந்த யாகம் நடைபெற்றப் பின்னர் அவன் தனது யாகத்தை நடத்திக் கொள்ளலாம் எனக் கூறி விட்டார். ஆனால் நிமி மன்னனால் அத்தனை ஆண்டுகள் பொறுக்க

முடியாத நிலை. யாகம் நடத்த இருப்பதே நாட்டின் நல்வாழ்வுக்கு என இருக்கும் பொழுது அதை எப்படி ஐந்நூறு வருடங்கள் தள்ளிப் போடுவது?

அரண்மனைக்குத் திரும்பியவரிடம் அவருடைய அமைச்சர்கள் வசிஷ்டருக்குப் பதிலாக கௌதம முனிவரின் மேற்பார்வையில் யாகத்தை நடத்தி விடலாம் எனத் தெரிவித்த யோசனையை ஏற்றுக் கொண்டு யாகத்தைத் துவக்கி விட்டார். யாகம் பல ஆண்டுகள் தொடர்ந்து கொண்டு இருந்தது. ஐந்நூறு வருட யாகத்தை இந்திரனுக்கு முடித்துக் கொடுத்து விட்டுத் திரும்பிய வசிஷ்டர், தனக்கு பதிலாக கௌதம முனிவரை வைத்து நிமி யாகம் நடத்தியதைக் கண்டு கோபமுற்று தன்னை அவமானப்படுத்தி விட்டதாகக் கருதி அவன் உயிர் உடலை விட்டு வெளியேறட்டும் என சபித்தார். நிமியோ அந்த யாகத்தை நடத்த வேண்டிய முக்கியத்துவத்தையும் உண்மையான காரணங்களையும் கூறியும் அவர் தந்த எந்த விளக்கத்தையும் வசிஷ்டர் ஏற்க மறுக்க, அவனும் பெரிய பண்டிதன் என்பதினால் அவருக்கும் அது போலவே சாபம் இட்டு விட்டான். அதைக் கண்டு பயந்து போன வசிஷ்டர், பிரும்மாவிடம் ஓடிச் சென்று தனக்கு ஏற்பட்ட சாபத்தைக் கூறி அழுதார். வசிஷ்டரிடம் அவர் செய்த பிழையை சுட்டிக் காட்டிய பிரும்மாவும், அவருக்கு மீண்டும் அதே பிறவி கிடைக்கும் என ஆசிர்வதித்தார். அதன்படி அவருடைய உயிர் சுற்றி அலைந்து கொண்டிருந்த பொழுது, ஊர்வசியின் அழகைக் கண்டு மயங்கி அவளைக் கண்டு மனம் லயித்த மித்ரவருணர் முனியின் உடலில் இருந்து கீழே விழுந்த உயிர் அணு ஒரு மண் சட்டியில் விழ, அதில் போய் கலந்து விட்டது வசிஷ்டரின் உயிர். அந்த மண் சட்டி உடைந்து அகஸ்தியரும், மீண்டும் வசிஷ்டரும் அதில் இருந்து தோன்றினார்.

அதே சமயம் நிமியின் உடலில் இருந்து வெளியேறிய உயிரும் சுற்றி அலையத் துவங்கியது. அதே சமயம் அவருடைய உயிரற்ற உடலும் முனிவர்களால் பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டது. யாகம் முடிந்த பின் அதனால் மகிழ்வுற்ற தேவர்கள் சுற்றி அலைந்துக் கொண்டு இருந்த நிமியின் உயிரிடம் உனக்கு என்ன வரம் வேண்டும் எனக் கேட்ட பொழுது; தான் சொர்கத்திற்கு செல்ல விரும்புவதாகவும் தன் நினைவு மக்களிடம் என்றும் இருக்க வேண்டும் எனவும் அவர் வேண்டிக் கொள்ள, அவனை மனிதர்களின் கண் இமையாக மாறுமாறு ஆசி கூறி விட்டனர். பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டு இருந்த அவருடைய உயிறற்ற உடலில்

இருந்து இன்னொரு உயிரை உற்பத்தி செய்ய அதுவே ஜனகராக மாறியது. அந்த ஜனகர் பரம்பரையில் வந்த ஜனக மன்னன் ஒருவருடைய மகள்தான் இராமாயணக் காவியம் உருவாக வழி வகுத்த அன்னை சீதை.